**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை :** திருமதி **V.** பார்கவி**, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2053 பிலவ வருடம் மாசி மாதம் 25ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.132/2015- ல் இடைமனு எண்.02/2021**

1. கலியபெருமாள் ( இறந்தார்)
2. ராஜா
3. அஞ்சலிதேவி
4. சேதுபதி
5. காயத்ரி ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

...எதிர்...

ராமலிங்கம்

..எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 01.03.2022அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுவாமிநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A. ராம்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக்கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இந்த அசல் வழக்குஎண். 132/2015 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/ வாதியால் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. 2-ம்மனுதாரர்/2-ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்துக்கு அரசாங்கத்தால் கொடுத்த பட்டா செல்லத்தக்கதல்ல என்ற விளம்பல் பரிகாரம் கோரியும், மேற்படி சொத்தை அதில் உள்ள கட்டுமானங்களை அகற்றி வசம் ஒப்படைக்க வேண்டுமெனக்கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 169/2019 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 169/2019-ன் வாதிகள். இந்த வழக்கின் வாதிதான் அசல் வழக்கு எண். 169/2019 வழக்கின் 1-ம் பிரதிவாதி. இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்து அசல் வழக்கு எண்.169/2019 வழக்கின் "பி" ஷெடியூல் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி "ஏ" ஷெடியூல் சொத்து "பி" ஷெடியூல் சொத்தை உள்ளடக்கி உள்ளது. இரண்டு வழக்குகளில் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து ஒன்றுதான். இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்தினால்தான் வழக்கின் உண்மை நிலை நீதிமன்றத்திற்கு தெரியவரும். இந்த வழக்கை அசல் வழக்கு எண்.169/2019 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து நடத்தாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே இந்த அசல் வழக்குஎண். 132/2015 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

தாவா "ஏ" ஷெடியூல் சொத்து மற்றொரு அசல் வழக்கான அ.வ.எண்.169/2019-ல் "பி" ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளது என்பதும், தாவா "ஏ" ஷெடியுல் சொத்து "பி" ஷெடியூல் சொத்தை உள்ளடக்கி உள்ளது என்பதும், இரண்டு வழக்குகளிலும் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ஒன்றுதான் என்பதும் மறுக்கப்படுகிறது. இந்த வழக்கு சொத்தின் புல எண். 262/H/46 ஆகும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கான அ.வ.எண். 169/2019-ன் புல எண் 262H/13 என்பது வேறு. மேற்படி இரண்டு புல எண்களும் வெவ்வேறானது, அவை வெவ்வேறு பரப்பளவு கொண்டவை மற்றும் அவை வெவ்வேறு நான்கெல்லையை தனித்தனியாக கொண்டவை. மேற்படி இரண்டு வழக்குகளின்

சொத்து விபரம் ஒன்று இல்லை என்பதை வாதி நிரூபிக்க தயாராக உள்ளார். இவ்வழக்கில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிலஅளவை ஆணையர் தாவா சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இந்த வழக்கின் சொத்தும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்கு சொத்தும் ஒன்றுதான் என்று கூறவில்லை. அசல் வழக்கு எண். 169/2019- வழக்கின் சொத்தின் ஒரு பகுதிதான் இந்த வழக்கின் 262/H/46 சொத்து என்று எந்த இடத்திலும் நிலஅளவையர் அறிக்கை வரைபடத்தில் கூறவில்லை. இதிலிருந்து இந்த வழக்கின் சொத்தும், அசல் வழக்கு எண். 169/2019 ன் வழக்கு சொத்தும் வேறு என்பது தெரியவரும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 என்ற வழக்கில் "பி" ஷெடியூல் சொத்தின் இரண்டு நான்கெல்லைகள் தவறாக உள்ளது என்றும் அதனை திருத்தம் செய்ய வேண்டும் என்று இடைமனு எண்.1/2021 என்ற மனுவை கடந்த 09.11.2021 அன்று தாக்கல் செய்துள்ளார்கள். இதிலிருந்தே தாவா சொத்தும் அசல் வழக்கு எண். 169/2019-ன் "பி" ஷெடியூல் சொத்தும், இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்து என்பதும் வேறு என்பதும் தெரியும். இந்த வழக்கின் வழக்கு சொத்தும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 ன் வழக்கு சொத்தும் வெவ்வேறானது மற்றும் வெவ்வெறு நான்கெல்லைகள் கொண்டது என்பதால்தான் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்கின் பிராதில் வழக்கு சொத்தை குறித்து மாதிரி வரைபடம் வரைந்து "ஏ" ஷெடியூல் சொத்தையோ "பி" ஷெடியூல் சொத்தையோ தனித்து காட்டவில்லை. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வழக்கில் நல்ல கட்சியில்லை என்பதால் இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத வேறொரு புல எண் கொண்ட சொத்தை இந்த வழக்குடன் சேர்த்து நடத்த வேண்டும் என்று இந்த மனுவினை பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/ வாதியால் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், 2-ம்மனுதாரர்/2-ம் பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்துக்கு அரசாங்கத்தால் கொடுத்த பட்டா செல்லத்தக்கதல்ல என்ற விளம்பல் பரிகாரம் கோரியும், மேற்படி சொத்தை அதில் உள்ள கட்டுமானங்களை அகற்றி வசம் ஒப்படைக்க வேண்டுமெனக்கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 169/2019 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், இந்த வழக்கின் பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 169/2019-ன் வாதிகள் என்றும், இந்த வழக்கின் வாதிதான் அசல் வழக்கு எண். 169/2019 வழக்கின் 1-ம் பிரதிவாதி என்றும், இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்து அசல் வழக்கு எண்.169/2019 வழக்கின் "பி" ஷெடியூல் சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றும், மேற்படி "ஏ" ஷெடியூல் சொத்து "பி" ஷெடியூல் சொத்தை உள்ளடக்கி உள்ளது என்றும், இரண்டு வழக்குகளில் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து ஒன்றுதான் என்றும், இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்தினால்தான் வழக்கின் உண்மை நிலை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றும், இந்த வழக்கை அசல் வழக்கு எண்.169/2019 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து நடத்தாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே இந்த அசல் வழக்குஎண். 132/2015 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா "ஏ" ஷெடியூல் சொத்து மற்றொரு அசல் வழக்கான அ.வ.எண்.169/2019-ல் "பி" ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளது என்பதும், தாவா "ஏ" ஷெடியூல் சொத்து "பி" ஷெடியூல் சொத்தை உள்ளடக்கி உள்ளது என்பதும், இரண்டு வழக்குகளிலும் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ஒன்றுதான் என்பதும் மறுக்கப்படுகிறது என்றும், இந்த வழக்கு சொத்தின் புல எண். 262/H/46 என்றும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கான அ.வ.எண். 169/2019-ன் புல எண் 262H/13 என்பது வேறு

என்றும், மேற்படி இரண்டு புல எண்களும் வெவ்வேறானது, அவை வெவ்வேறு பரப்பளவு கொண்டவை மற்றும் அவை வெவ்வேறு நான்கெல்லையை தனித்தனியாக கொண்டவை என்றும், மேற்படி இரண்டு வழக்குகளின் சொத்து விபரம் ஒன்று இல்லை என்பதை வாதி நிரூபிக்க தயாராக உள்ளார் என்றும், இவ்வழக்கில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிலஅளவை ஆணையர் தாவா சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இந்த வழக்கின் சொத்தும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்கு சொத்தும் ஒன்றுதான் என்று கூறவில்லை என்றும், அசல் வழக்கு எண். 169/2019- வழக்கின் சொத்தின் ஒரு பகுதிதான் இந்த வழக்கின் 262/H/46 சொத்து என்று எந்த இடத்திலும் நிலஅளவையர் அறிக்கை வரைபடத்தில் கூறவில்லை என்றும், இதிலிருந்து இந்த வழக்கின் சொத்தும், அசல் வழக்கு எண். 169/2019 ன் வழக்கு சொத்தும் வேறு என்பது தெரியவரும் என்றும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 என்ற வழக்கில் "பி" ஷெடியூல் சொத்தின் இரண்டு நான்கெல்லைகள் தவறாக உள்ளது என்றும் அதனை திருத்தம் செய்ய வேண்டும் என்று இடைமனு எண்.1/2021 என்ற மனுவை கடந்த 09.11.2021 அன்று மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இதிலிருந்தே தாவா சொத்தும் அசல் வழக்கு எண். 169/2019-ன் "பி" ஷெடியூல் சொத்தும், இந்த வழக்கின் "ஏ" ஷெடியூல் சொத்து என்பதும் வேறு என்பதும் தெரியும் என்றும், இந்த வழக்கின் வழக்கு சொத்தும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 ன் வழக்கு சொத்தும் வெவ்வேறானது மற்றும் வெவ்வெறு நான்கெல்லைகள் கொண்டது என்பதால்தான் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 169/2019 வழக்கின் பிராதில் வழக்கு சொத்தை குறித்து மாதிரி வரைபடம் வரைந்து "ஏ" ஷெடியூல் சொத்தையோ "பி" ஷெடியூல் சொத்தையோ தனித்து காட்டவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வழக்கில் நல்ல கட்சியில்லை என்பதால் இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத வேறொரு புல எண் கொண்ட சொத்தை இந்த வழக்குடன் சேர்த்து நடத்த வேண்டும் என்று இந்த மனுவினை பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன, வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்குக் கோப்புக்களை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / வாதியால் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக சுவாதீன மீட்பு மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்த அசல் வழக்கு எண். 132/15-ல் வழக்குச்சொத்தாக " A" அட்டவணைச்சொத்தாக சீர்காழி தாலுக்கா, திருமைலாடி வட்டம், மாங்கனாம்பட்டு கிராமம் அருந்ததியர் தெருவில் புல எண். 262/H/46-ல் 1.50 ஏர்ஸ் அதில் உள்ள வீடு உள்பட என்றும், தாவா "B" அட்டவணைச்சொத்தாக புல எண். 262 / H/46-ல் புஞ்சை 39 சதுர மீட்டருக்கு சமமான 420 சதுரடி என்றும் சொத்து விவரம் காட்டப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இம்மனுவில் அசல் வழக்கு எண்.132/15-ன் வழக்குச் சொத்து அசல் வழக்கு எண்.169/19-ன் "பி" அட்டவணைச் சொத்து என்ற சொத்தும் ஒன்றுதான் என்று கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் அசல் வழக்கு எண்.169/19-ன் கோப்புக்களை பரிசீலனை செய்தபோது மனுதாரர்கள் கூறியுள்ளதுபோல் அந்த வழக்கின் "பி" ஷெடியூல் சொத்தாக சீர்காழி தாலுக்கா, திருமைலாடி வட்டம், மாங்கனாம்பட்டு, அருந்ததியர் தெருவில் புஞ்சை பழைய சர்வே எண். 262H/13-ல் புதிய சர்வே எண். 262H/46-ல் 0.01.50 ஏர்ஸ் (1512 சதுரடி) என்று காட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த அசல் வழக்கின் வழக்குச்சொத்தான புல எண். 262 / H/46 என்பது அசல் வழக்கு எண்.169/19-ன் "பி" அட்டவணைச் சொத்து என்பது தெரியவருகிறது.

9. மேலும் இந்த அசல் வழக்கு எண்.132/2015 வழக்கின் வாதி ராமலிங்கம் அசல் வழக்கு எண்.169/19-ல் 1-ம் பிரதிவாதியாகவும், அசல் வழக்கு எண்.132/2015 வழக்கின் 2 முதல் 5 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.169/19-ன் வாதிகளாகவும் உள்ளனர். மேலும் இந்த வழக்கு மற்றும் அசல் வழக்கு எண். 169/19-ன் தரப்பினர்களும் ஒன்றாக உள்ள நிலையிலும், இருவழக்குகளில் குறிப்பிட்டுள்ள புல எண் 262 / H/46 என்ற சொத்து தாவாச்சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு வழக்குகளிலும் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இரண்டு வழக்குகளையும் சேர்த்து விசாரணை செய்வதால் தரப்பினர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்பதுடன் நீதிமன்றத்தின் நேரமும்

மிச்சப்படும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த அசல் வழக்கு எண்.132/2015 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 169/2019 என்ற வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்தால்தான் ஒரே பொருண்மையின் அடிப்படையில் இருவேறுபட்ட தீர்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க உதவும் என்பதுடன், இரு வழக்குகளிலும் ஒன்றாக விரைவில் தீர்வு காண முடியும் என்பதாலும் மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் இந்த அசல் வழக்கு எண். 132/2015-யை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் அசல் வழக்கு எண். 169/19 வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பது என்றும், மனுவின் தன்மை கருதி செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

10. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 09-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள | - இல்லை- |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | -இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | -இல்லை- |

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 132/2015-ல்
இடைமனு எண்.02/2021
நாள் - 09.03.2022.